

உடல்நலக் குறைவு காரணமாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று, தற்போது வீடு திரும்பியுள்ள தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ். முருகன் அவர்களை, அவரது இல்லத்தில் திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன் அவர்கள் நேரில் சந்தித்து நலம் விசாரித்தார்.

# விடுதலைத் திருநாள் விழா!

# தி.மு.க. தலைமைக் கழகம் அண்ணா அறிவாலயத்தில்

## இன்று (15-8-2026) காலை சரியாக 8.00 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்படுகிறது

இந்திய நாட்டின் விடுதலைத் திருநாளினை யொட்டி, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் தி.மு.க. தலைமைக் கழகமான அண்ணா அறிவாலயத்தில் இன்று (15-8-2026 சனிக்கிழமை) காலை சரியாக 8.00 மணிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தேசியக் கொடி ஏற்றி வைக்கிறார்.

சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை கிழக்கு - சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### தமிழ்நாட்டின் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் ஆட்சேபனைகள் –

# மாநிலத்தின் முன்மொழிவுகள் இருந்தும் ஒப்புதல் தாமதம் ஏன்!

## மக்களவையில் கே.இ.பிரகாஷ் கேள்வி!

புதுடெல்லி, ஆக.15-

ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினர் கே.இ. பிரகாஷ் அவர்கள், கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் மெட்ரோ ரயில் திட்டங்களை செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறு அறிக்கைகளுடன் கூடிய முன்மொழிவுகளை தமிழ்நாடு அரசு சமர்ப்பித்துள்ளதா என்றும், அவ்வாறு சமர்ப்பித்திருந்தால் அதன் விவரங்கள் என்ன என்றும்; மேற்கண்ட முன்மொழிவுகள் மெட்ரோ ரயில் கொள்கை, 2017-ன் கீழ் ஒன்றிய அரசால் பரிசீலிக்கப்பட்டுள்ளதா என்றும், அவ்வாறு பரிசீலிக்கப்பட்டிருந்தால் அதன் விவரங்கள் மற்றும் தற்போதைய நிலை என்ன என்றும்;

மேற்கண்ட முன்மொழிவுகளுக்கு ஒப்புதல் வழங்கப்படவில்லையெனில், மக்கள் தொகை, எதிர்பார்க்கப்படும் பயணிகள் எண்ணிக்கை, பொருளாதார சாத்தியக்கூறு மற்றும் நகர்ப்புறப் போக்குவரத்து ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீடு பின்பற்றப்பட்ட அளவுகோல்களைப் பயன்படுத்தியதற்கான காரணங்கள் என்ன என்றும்: செய்வதற்காகப் கடந்த ஐந்து ஆண்டுகளிலும் நடப்பு ஆண்டிலும் ஒத்த மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளதா என்றும், அவ்வாறு அளித்திருந்தால் அதன் விவரங்கள் என்ன என்றும்; வளர்ந்து வரும் இரண்டாம் நிலை தொழில் நகரங்கள் மற்றும் மேற்கு தமிழ்நாடு உள்ளிட்ட பிராந்திய வளர்ச்சி வழித்தடங்களின் அதிகரித்து வரும் பொருளாதார முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு, வெகுஜன விரைவுப் போக்குவரத்து அமைப்பு திட்டங்களை செயல்படுத்துவதற்கு தற்போதுள்ள மதிப்பீட்டு கட்டமைப்பை மறுஆய்வு செய்ய அரசு முன்மொழிகிறதா என்றும்: மேலும், அதிகரித்து வரும் நகர்ப்புறப் போக்குவரத்து தேவை. தொழில்துறை வளர்ச்சி, சுற்றுலா வாய்ப்புகள் மற்றும் கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் பெருமளவிலான யாத்திரிகர்கள் வருகை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு விரைவில் ஒப்புதல் அளிக்க அரசு முன்மொழிகிறதா என்றும், அவ்வாறு முன்மொழிந்திருந்தால் அதன் விவரங்கள் என்ன என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்?



**வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் பின்வருமாறு பதிலளித்துள்ளது**

(அ) முதல் (ஊ) வரை: ஒரு அறிக்கை அவையின் மேசையில் வைக்கப்பட்டுள்ளது.

“தமிழ்நாட்டில் மெட்ரோ ரயில் திட்டங்களின் நிலை தொடர்பாக, ஈரோடு மக்களவைத் தொகுதி உறுப்பினர் திரு. கே. இ பிரகாஷ் அவர்கள் கேட்ட 13.08.2026 அன்று பதிலளிக்க வேண்டிய மக்களவை நட்சத்திரக் கேள்வி எண் 361-ன் (நிலை 3) (அ) முதல் (ஊ) வரையிலான பகுதிகளுக்கான பதிலுடன் தொடர்புடைய அறிக்கை

(அ): தமிழ்நாடு அரசு, கோயம்புத்தூர் மற்றும் மதுரையில் முறையே 34.8 கி.மீ. மற்றும் 32 கி.மீ. நீளமுள்ள மெட்ரோ ரயில் திட்டங்களுக்கான CMP மற்றும் DPR ஆகியவற்றுடன் கூடிய முன்மொழிவுகளை டிசம்பர் 2024-ல் சமர்ப்பித்துள்ளது.

(ஆ) மற்றும் (இ): மெட்ரோ ரயில் கொள்கை, 2017 மற்றும் நடைமுறையில் உள்ள கொள்கை வழிகாட்டுதல்களுக்கு இணங்க, இந்த முன்மொழிவுகள் ஒன்றிய அரசால் பரிசீலிக்கப்பட்டுள்ளன. ஒன்றிய அரசின் ஆட்சேபனைகள் மாநில அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. அரசின் ஆட்சேபனைகளுக்கு பதிலளிக்கும் வகையில் மாநில அரசு தனது பதிலை சமர்ப்பித்துள்ளது. மாநில அரசின் பதிலுக்கு எதிரான இந்திய அரசின் கூடுதல் ஆட்சேபனைகள் மாநில அரசுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்திய அரசின் முக்கிய ஆட்சேபனைகள் பின்வருமாறு

**கோயம்புத்தூர்**

i. குறைந்த சராசரி பயணத் தூரம் மற்றும் சாலைகளில் நிலவும் சராசரி வேகத்தை கருத்தில் கொள்ளும்போது. பயண நேரத்தில் மிகக் குறைந்த சேமிப்பு மட்டுமே இருப்பதால், மெட்ரோ அமைப்பிற்கு போக்குவரத்து மாறும் என எதிர்பார்க்கப்படவில்லை.

ii. கோயம்புத்தூர் மாநகராட்சி (CMC) பகுதிக்கு கூடுதலாக, உள்ளூர் திட்டமிடல் பகுதியின் (LPA) மக்கள் தொகையும் மெட்ரோ அமைப்பால் சேவை பெறும் பகுதியாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. LPA-வில் வசிக்கும் மக்கள் மெட்ரோ அமைப்பைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு குறைவாக உள்ளது. ஏனெனில் இந்தத் திட்டம் முக்கியமாக CMC பகுதியைச் சேவை செய்கிறது.

iii கோயம்புத்தூர் மெட்ரோவின் வலையமைப்பிற்கு நாளொன்றுக்கு முன்மொழியப்பட்ட 5.9 34 கி.மீ. லட்சம் பயணிகள் கணிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை, அதிக மக்கள் தொகைக்கு சேவை செய்து வரும் சென்னை மெட்ரோ முதல் கட்டத்தின் 5410 கி.மீ. இயக்கத்தில் உள்ள வலையமைப்பில் நாளொன்றுக்கு 4 வட்சம் என்ற உண்மையான பயணிகள் எண்ணிக்கையுடன் ஒப்பிடுகையில் அதிகமாக உள்ளது. எனவே, DPR-ல் கணிக்கப்பட்டுள்ள பயணிகள் எண்ணிக்கை யதார்த்தமானதாக இல்லை.

iv. பல இடங்களில் போதுமான வழித்தட உரிமை (RoW) கிடைக்காததால். கட்டுமானப் பணிகளின்போது கட்டிடங்களை இடிக்கும் நிலை ஏற்படவாய்ப்புள்ளது.

**மதுரை**

தமிழ்நாடு அரசு (GoTN) சமர்ப்பித்துள்ள விரிவான போக்குவரத்து திட்டத்தில் (CMP), தற்போதைய பயணிகள் எண்ணிக்கை பேருந்து விரைவுப் போக்குவரத்து அமைப்பிற்கு (BRTS) நியாயமானதாக உள்ளது என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ஈ): திட்டத்தின் ஒப்புதல், முன்மொழிவுகளை முழுமையாகப் பரிசீலித்த பின்னரே வழங்கப்படுகிறது (ஒரு அளவுகோலை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அவசியமில்லை). இருப்பினும், அது எப்போதும் முன்மொழிவின் சாத்தியக்கூறு மற்றும் வளங்களின் இருப்பைப் பொறுத்தே அமையும். கடந்த ஐந்து ஆண்டுகளில் ஒத்த மக்கள் தொகையைக் கொண்ட நகரங்களில் இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட மெட்ரோ திட்டங்களின் விவரங்கள் இணைக்கப்பட்டுள்ளன (இணைப்பு-1).

(உ) மற்றும் (ஊ): ‘நகர்ப்புறத் திட்டமிடல்’ என்பது மாநிலப் பொருளாகும்.

எனவே, நகர்ப்புற உள்கட்டமைப்பு மெட்ரோ திட்டங்களின் மேம்பாட்டிற்கான திட்டமிடல், முன்மொழிவுகளைத் தொடங்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்கு சம்பந்தப்பட்ட மாநில அரசுகளே பொறுப்பாகும். சம்பந்தப்பட்ட மாநில அரசு முன்மொழிவை சமர்ப்பிக்கும் போது, அதன் சாத்தியக்கூறு மற்றும் வளங்களின் இருப்பைப் பொறுத்து, மெட்ரோ ரயில் கொள்கை, 2017-ன் விதிகளின்படி ஒன்றிய அரசு மெட்ரோ ரயில் திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குகிறது. மெட்ரோ திட்டங்கள் அதிக செலவினம் கொண்டவை என்பதால், நீண்டகால நிலைத்தன்மையை உறுதி செய்ய அவை கவனமாகத் திட்டமிடப்பட வேண்டும். இந்தப் பின்னணியில், நடைமுறையில் உள்ள கொள்கை வழிகாட்டுதல்களின் அடிப்படையில், மெட்ரோ திட்டங்கள் ஒன்றிய அரசின் பல்வேறு நிலைகளில் தீவிரமான பரிசீலனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

### மறைமலை அடிகளார் புதல்வர்

# மறை.பச்சையப்பன் மறைவு!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஆக. 15-**

**தனித் தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளாரின் புதல்வர் மறைவுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.**

“கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி” வருமாறு:-

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலை அடிகளாரின் மகனான மறை. பச்சையப்பன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வருத்தமுற்றேன்.

திரு. மறை. பச்சையப்பனை இழந்து வாடும் அவர்தம் குடும்பத்தினருக்கும் தமிழுலகினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### 17,8,2026 - முரசொலிமாறன் 93வது பிறந்தநாள் – ‘முரசொலி’ வளாக முகப்பிலுள்ள

# முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மாலை அணிவிக்கிறார்!

## மாவட்டக் கழகத் தோழர்களுக்கு - சென்னை மாவட்டக் கழகச் செயலாளர்கள் வேண்டுகோள்!



முத்தமிழறிஞர் கலைஞரின் மனசாட்சியாக விளங்கியவரும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூளையாக செயல்பட்டவரும் ஒன்றிய அமைச்சராக இருந்து அனைவருடைய பாராட்டுதல்களையும் பெற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றியவருமாகிய முரசொலி மாறன் அவர்களின் 93வது பிறந்த நாளினை முன்னிட்டு 17.8.2026 திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் கோடம்பாக்கம், 'முரசொலி' அலுவலகத்தில் அமைந்துள்ள முரசொலி மாறன் திருவுருவச் சிலைக்கு **கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின்** மற்றும் கழக முன்னணியினர் மலர்மாலை அணிவிக்கின்றனர்.

அதுபோது ஒருங்கிணைந்த சென்னை மாவட்ட, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத் தோழர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நாள்: 14.8.2026** **சென்னை மாவட்ட தி.மு.க.,**

### ஒன்றிய அரசின் பிடிவாதம் காரணமாக முடங்கியது நாடாளுமன்றம்!

# மழைக்காலக் கூட்டத் தொடரில் 175 கோடி ரூபாய் பாழ்!

## மக்களின் வரிப்பணம் வீணடிக்கப்பட்ட அவலம்!

**புதுடெல்லி, ஆக. 15-**

**ஒன்றிய அரசின் பிடிவாதம் காரணமாக முடங்கிய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் மக்களின் வரிப்பணம் 175 கோடி ரூபாய் வீணானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கடந்த ஜூலை 20ம் தேதி தொடங்கி, நடந்து முடிந்த நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடரில் மொத்தம் 19 அமர்வுகள் நடைபெற்றன. நீட் வினாத்தாள் கசிவு, கல்வித் துறை அமைச்சர் ராஜினாமா, டெல்லி மாணவர்கள் போராட்டத்தில் காவல்துறையின் தாக்குதல், ராமர் கோயில் நன்கொடை முறைகேடு எனப் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தின. ஆனால், ஒன்றிய அரசு அனுமதி அளிக்காததால் நாடாளுமன்றம் ஒருநாள் கூட முழுமையாக நடைபெறவில்லை. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் செயல்பட ஒரு நிமிடத்துக்கு 2.5 லட்சம் ரூபாய் செலவாகும். ஒரு மணிநேரத்துக்கு 1.5 கோடி ரூபாய் செலவாகிறது. 6 மணிநேரம் கொண்ட ஒருநாள் அமர்வுக்கு 9 கோடி ரூபாய் செலவிடப்படும். தற்போது நடந்து முடிந்த மழைக்கால கூட்டத் தொடரில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் 7,000 நிமிடங்களுக்கும் மேலாக முடங்கின. இதன்மூலம் நடந்து முடிந்த மழைக்கால கூட்டத்தொடரில் மக்களின் வரிப் பணமான 175 கோடி ரூபாய் பணம் வீணடிக்கப் பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

ஒன்றிய அரசின் பிடிவாதம் மக்களின் வரிப்பணம் ரூ.175 கோடி வீணடிப்பு

ஜூலை 20ம் தேதி தொடங்கி, நடந்து முடிந்த நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடரில் மொத்தம் 19 அமர்வுகள் நீட் வினாத்தாள் கசிவு, கல்வித்துறை அமைச்சர் ராஜினாமா, டெல்லி மாணவர்கள் போராட்டத்தில் காவல்துறையின் தாக்குதல், ராமர் கோயில் நன்கொடை முறைகேடு எனப் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதிக்க எதிர்க்கட்சிகள் வலியுறுத்தல். ஒன்றிய அரசு அனுமதி அளிக்காததால் நாடாளுமன்றம் ஒருநாள் கூட முழுமையாக நடைபெறவில்லை இரு அவைகளும் செயல்பட ஒரு நிமிடத்துக்கு ரூ.2.5 லட்சம் செலவாகும். ஒரு மணிநேரத்துக்கு ரூ.1.5 கோடி செலவாகிறது 6 மணிநேரம் கொண்ட ஒருநாள் அமர்வுக்கு ரூ.9 கோடி செலவிடப்படும். நடந்து முடிந்த மழைக்கால கூட்டத்தொட ரில் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் 7,000 நிமிடங்களுக்கும் மேலாக முடங்கின மழைக்கால கூட்டத்தொடரில் மக்களின் வரிப் பணமான ரூ.175 கோடி பணம் வீணடிக்கப் பட்டது.

### விஜய்யின் ஆஸ்தான ஜோதிடர் ஆலோசனைப்படி–

# நாமக்கல் கவிஞர் மாளிகை 10வது தளத்தில் - விஜய் அலுவலகம் மாற்றம்!

## சுமார் ரூ.5½ கோடிக்கு டெண்டர் – பொதுமக்கள் விமர்சனம்!

சென்னை, ஆக. 15–

சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள தலைமை செயலகத்தில் 350 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ள பாரம்பரிய மிக்க பிரதான கட்டிடத்தில் தமிழ்நாடு முதல்வரின் அலுவலகம் அமைந்துள்ளது. ஆனால், முதல்வராக விஜய் வந்தபிறகு இந்த அலுவலகத்தை மாற்றி, நவீன வசதியுடன், தலைமை செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்தில் முதல்வர் அலுவலகத்தை மாற்ற உத்தரவிட்டார்.

விஜய்யின் ஆஸ்தான ஜோதிடரின் ஆலோசனைப்படி, முழுமை யான வாஸ்து பார்த்து, அறைகள் அமைக்கப்பட உள்ளன. மாற்றம் செய்யப்படும் முதல்வர் அலுவலகத்தில் அலங்கார பணிகளை மேற்கொள்ள ஐந்தரை கோடி ரூபாய் செலவில் பொதுப்பணித் துறை டெண்டர் கோரியுள்ளது.

பணிகளை விரைந்து முடிக்கும் வகையில் மூன்று பிரிவுகளாக பிரித்து டெண்டர் கோரப் பட்டுள்ளது. 10வது தளத்தில் உள்ள பிளாக்1க்கு 2 கோடியே 41 லட்சம் ரூபாயும், பிளாக்2க்கு 2 கோடியும், பிளாக்3க்கு ஒரு கோடியே 12 லட்சம் ரூபாய் டெண்டர் தொகையாக நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது. மாற்றம் என கூறி ஆட்சிக்கு வந்து, மக்களின் வரிப்பணத்தை வீண்டித்து முதலமைச்சர் அலுவலகத்தை மாற்றுவது தான் உங்களின் மாற்றமா? என விமர்சனங்கள் எழுந்துள்ளன.

### அரசு போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்க செயற்குழுக் கூட்டம்!

**பேரவைப் பொதுச் செயலாளர் மு.சண்முகம் தலைமை!**

அரசு போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கங்களின் கூட்டமைப்பின் செயற்குழுக் கூட்டம் வருகின்ற 25.08.2026 செவ்வாய்க் கிழமை அன்று காலை 09.00 மணியளவில் திருச்சி மாவட்டக் கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயத்தில் கூட்டமைப்பின் தலைவரும், தொ.மு.ச. பேரவைப் பொதுச்செயலாளருமான **மு.சண்முகம்,** Ex.MP அவர்களின் தலைமையில் தொ.மு.ச. பேரவைப் பொருளாளர் கோ.சி. வள்ளுவன் அவர்களின் முன்னிலையில் நடை பெற உள்ளது.

தங்கள் சங்கத்தின் தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட மூவர் மட்டும் கூட்டத்தில் அவசியம் கலந்து கொண்டு சிறப் பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

நிர்வாகப் பணியாளர் மற்றும் மேற்பார்வையாளர் முன்னேற்றச் சங்கத்தின் சார்பில் அந்த சங்கத்தின் பொதுச்செயலாளர் மட்டும் கூட்டத்தில் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

**பொருள்:**

1)போக்குவரத்துக் கழகங்களின் நிர்வாகச் செயல்பாடுகள் குறித்து

2)போக்குவரத்துக் கழக இணைப்புச் சங்க பிரச்சினைகள் குறித்து

3)ஒன்றிய அரசின் – மாநில அரசின் தொழிலாளர் விரோத நடவடிக்கை குறித்து

4)தணிக்கை செய்யப்பட்ட 2025–ஆம் ஆண்டிற்கான வரவு – செலவு கணக்குகளை அங்கீகரித்தல்.

5)கூட்டத் தலைவர் அவர்களால் அனுமதிக்கப் படும் இதர பிரச்சினைகள் குறித்து

இடம்:கலைஞரகம்

**கி.நடராசன்**
பொதுச்செயலாளர்
போக்குவரத்து கூட்டமைப்பு